# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

**முன்னிலை திரு. S. ஜோதிகைலாஷ், B.A.,B.L.,**

நீதித்துறை நடுவர், இரணியல் (கூ.மு.பொ)

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 422/2025**

**CASE SUMMARY**

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">Accused not Remanded</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/ final report in the Court</td><td colspan="3">15.05.2025</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused 316,351 (1) (a) 274 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 as the case may be</td><td colspan="3">08.06.2026</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 355 of the Code.</td><td colspan="3">U/s. 348 BNSS Petition allowed on 29.06.2026<br>U/s.359 BNSS Petition allowed in respect of compoundable offence alone on 29.06.2026</td></tr>
<tr><td rowspan="3">6</td><td rowspan="3">Date of examination in Chief and Cross examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>29.06.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.2</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the Court</td><td colspan="3">30.06.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">N.A</td></tr>
</table>

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**இரணியல்** காவல் நிலையம்,<br>குற்ற எண். 299/2025 | .......................குற்றமுறையீட்டாளர், |



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:04 +0530

| /எதிர்/ | |
|---|---|
| கணேசன் (வயது 48/2025)<br>த/பெ.செல்லத்துரை<br>மாவிளை, குருந்தன்கோடு | ........... குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு **04.07.2025** அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **30.06.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.சிவகுமார்** அவர்கள் ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **30.06.2026** ஆம் தேதி நீதிமன்றம் **கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன்** கீழ் பிறப்பிக்கும்.....

**தீர்ப்புரை**

இத்தீர்ப்புரையில் பாரதிய நியாய சன்கீதா 2023 என்பது பா.நி.ச 2023 என்றும், பாரதிய சாக்சிய அதிநயம் 2023 என்பது பா.சா.அ 2023 என்றும், பாரதிய நாகரிக் சுரக்ச சங்கீதா 2023 என்பது, பா.நா.சு.ச.2023 என்றும் பதிவிடப்படுகின்றது.

**1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :–**

கடந்த 11.05.2025 ஆம் தேதி மாலை 05.30 மணிக்கு புகார்தாரர் கோபாலகிருஷ்ணன் TN 75 K 4205 என்ற பதிவு எண் கொண்ட புல்லட் இருசக்கர வாகனத்தில் மாவிளை, தூய அந்தோணியார் ஆலயம் முன்பு செல்லும் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை தடுத்து நிறுத்தியதாகவும், புகார்தாரரை கீழே தள்ளி புகார்தாரரின் மேல்பக்க வயிற்றில் சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும், கெட்ட வார்த்தைகள் பேசியதாகவும், காலால் புகார்தாரரின் அடிவயிற்றில் மிதித்தும், கையால் புகார்தாரரை தூக்கி மாறி மாறி பின் முதுகு, மார்பு முதலிய இடங்களில் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியதாகவும், வெட்டு கத்தியால் புகார்தாரரின் இடது தோள்பட்டை, இடது மேல்கையிலும் மாறி மாறி இடித்து சாதாரண காயங்கள் ஏற்படுத்தியதாகவும், கொலைமிரட்டல் விடுத்து புகார்தாரருக்கு மரணபயம் ஏற்படுத்தியதாக ஒரு தகவல் **பா.நா.சு.ச 2023 பிரிவு 173(1)ன் கீழ்** பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு **குற்றம் சுமத்தப்பட்ட நபரின்** செய்கையானது **பாரதிய நியாய சன்கீதா 2023 பிரிவுகள் 126(2), 296(b), 115(2),**



JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:12 +0530

**118(1) மற்றும் 351(3)ன்** கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று **பா.நா.சு.ச 2023 பிரிவு 193–** ன்படி குற்றமுறையீட்டாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. பா.நா.சு.ச 2023பிரிவு 230ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் **பா.நா.சு.ச 2023 பிரிவு 230** ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.பா.நா.சு.ச 2023 பிரிவு 256ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல்**

(1) வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **பா.நா.சு.ச 2023 256(1)ன் கீழ்** குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது **பாரதிய நியாய சன்கீதா 2023 பிரிவுகள் 126(2), 296(b), 118(1) மற்றும் 351(3)ன் கீழ்** குற்றச்சாட்டு வனையப்பட்டது.

(2) வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை **பா.நா.சு.ச 2023 256(2)ன் படி** தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் குற்றவாளி இல்லை எனக்கூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்.

(3) அரசுத்தரப்பு சாட்சிய விசாரணை துவங்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபரும் இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும் இணைந்து **சமரசமாகி** இந்த வழக்கினை **பா.நா.சு.ச 2023 பிரிவு 359(8)ன்** படியும் தாங்கள் ராசியாகி விட்டதாகவும், அதனால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

(4) மேற்படி மனுவினை இந்நீதிமன்றம் பரிசீலித்ததில் இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் **பாரதிய நியாய சன்கீதா 2023** பிரிவுகளான **296(b),118(1) மற்றும் 351(3) ஆகியவை பா.நா.சு.ச 2023 பிரிவு 359(1)** அல்லது **பிரிவு 359(2)** ன் கீழ் வரவில்லை என்பதால் **பாரதிய நியாய சன்கீதா 2023** பிரிவு **126(2) ஐ** பொறுத்து ஏற்றுக் கொண்டும், **பா.நி.ச. 2023** பிரிவுகளான **296(b), 118(1) மற்றும் 351(3)ஐ** பொறுத்து மேற்படி மனுவினை **தள்ளுபடி** செய்தது.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:16 +0530

**4. பா.நா.சு.ச 2023 பிரிவு 265ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:–**

அரசுத்தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.2** ஆகிய இருசாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலுள்ள சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5. பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவுதல்**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் **பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் தன் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பதில் அளித்தார்.

**6. பா.நா.சு.ச 2023 பிரிவு 266–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் சாட்சிய சாண்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு அதனடிப்படையில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

**இருதரப்பு வாதங்களை கேட்டபின்பு இந்நீதிமன்றம் ......**

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான **பாரதிய நியாய சன்கீதா 2023** பிரிவுகள் **296(b), 118(1) மற்றும் 351(3)ன் கீழான** குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் யாவை? பிரச்சனைக்கான தீர்வுகள்

**சாட்சியங்களில்.......**

**புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 கோபலகிருஷ்ணன்** தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சம்பவம் சம்மந்தமாக புகார்மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**புலனாய்வு : –**

**அ.சா.2 திரு. கார்த்தீபன்** கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:24 +0530

அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் நீதிமன்ற புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது முறையாக ஒரு புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் **மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து, காயச்சான்றிதழ் பெற்று** இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதை வைத்து இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில் தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**8. <u>இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு</u>**

(1) ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள், கேள்விப்பட்ட சாட்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது..

(2) இந்த வழக்கை பொறுத்தவரை நிகழ்நிலை புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் சமாதானமாகி சமாதானமனு தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த வழக்கில் அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக மேற்படி **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** அவர்கள் தரப்பு சாட்சிகளோ எந்தவித சாட்சியமும் அளிக்க மாட்டார்கள் என்பது ஒரு சாமானியனின் புரிதலின் தன்மை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**9. <u>இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவான</u>**
**<u>பா.நி.ச 2023 பிரிவு 296(b) ஐ பொறுத்து</u> :–**

**முதலாவதாக :-** குற்றம் சுமத்தப்பட்ட நபர் யாரேனும் ஒரு நபரை ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகிலோ ஏதாவது ஒரு ஆபாசச்செயலையோ அல்லது ஆபாசமான பாடலையே அல்லது வார்த்தைகளோ பாடி அல்லது உச்சரித்தது அல்லது கூறி அதனால் யாரேனும் ஒரு நபருக்கு தொல்லை ஏற்பட்டதா?

**<u>பா.நி.ச 2023 பிரிவு 118(1)ஐ பொறுத்து</u> :–**

**இரண்டாவதாக :-** குற்றம் சுமத்தப்பட்ட நபர் அபாயகரமான ஆயுதத்தால் அ.சா.1ஐ



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:28 +0530

தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினாரா?

**பா.நி.ச 2023 பிரிவு 351(3) பொறுத்து**

**மூன்றாவதாக** – குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை குற்றுமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் அவர்களுக்கு உடனடியான உயிர் பயம் ஏற்பட்டதா?

போன்ற கூறுகளை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**10. மேற்சொன்ன 3 வினாக்களுக்கான ஆய்வும் அதற்கான காரணமும்**

(1) அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்கவேண்டும் பின்னர் இந்த வழக்கை பொறுத்தவரை அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம்** ஆகியவற்றை இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும். இந்த வழக்கிலும் மேற்காணும் சங்கதிகள் தொடர்பான ஆவணங்களை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு **பா.சா.அ 2023 பிரிவு 104 மற்றும் பிரிவு 2ன் கீழ்** அரசுத்தரப்பையே முழுவதுமாக சார்ந்துள்ளது.

(2) அரசுத்தரப்பில் இந்த வழக்கினை அதன் சங்கதிகளை பொறுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரும், நட்சத்திர சாட்சியுமான **அ.சா.1 கோபாலகிருஷ்ணனை** முன்னிறுத்தி தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் இவ்வழக்கின் சாட்சியங்களை பின்வருமாறு இந்நீதிமன்றம் ஆய்வு செய்கிறது.

(3)அரசுத்தரப்பில், இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும், பாதிக்கப்பட்ட நபருமான **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பொறுத்து தனது சாட்சியத்தில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தன் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது, தன்னை யாரோ அடித்துவிட்டார்கள் என்றும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார்மனு கொடுத்துவிட்டேன் என்றும் சாட்சியம் அளித்திருப்பதை பொறுத்து அரசுத்தரப்பில் அதன் சங்கதிகளை பொறுத்து இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர் **ஆபாசமாக பேசி அதனால் யாரேனும் ஒருவருக்கு தொல்லை ஏற்பட்டது என்றோ, அ.சா.1ஐ அபாயகரமான ஆயுதத்தால் தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்றோ,**



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:35 +0530

**குற்றமுறு அச்சுறுத்தல் செய்து அதனால் உடனடியாக உயிர்பயம் ஏற்பட்டது என்றோ,** எந்த சாட்சியமும் முன்னிறுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது .

(4) அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களில் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்ட புகார்மனு அதனை தொடர்ந்து குறியீடு செய்யப்பட்ட **அ.சா.ஆ.3** ஆன முதல் தகவல் அறிக்கையும் வழக்கில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களை பொறுத்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் **நிரூபிக்கப்படவில்லை** என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(5) காயம் குறித்த சங்கதியை பொறுத்து மேற்படி **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** காயம் அடைந்துள்ளாரா அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** காயம் அடைந்துள்ளார் என்பதும், அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதும் அரசுத் தரப்பில் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(6) ஆனால் மேற்படி காயத்தை இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் ஏற்படுத்தினார் என்பதற்கான எந்தவித சாட்சியங்களையும் முன்னிறுத்தவில்லை என்பதையும் அதனால் காயத்தை யார் ஏற்படுத்தினார் என்ற சங்கதியானது நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(7) அரசுத்தரப்பில் **அ.சா.2** மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரி சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக்காட்டக்கூடிய மாதிரி வரைபடம், பார்வை மகசர் **அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5,** ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். மேற்படி கேள்விநிலை சாட்சியம் என்பது **பா.சா.அ 2023 பிரிவு 55ன் கீழ்** ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதையும் கருத்தில் கொண்டு **அ.சா.2 ஆன காவல் அதிகாரியின்** சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது, என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:41 +0530

(6) **பா.சா.அ 2023 பிரிவு 139**ன்படி ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.1 கோபாலகிருஷ்ணன்** அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் மற்ற சாட்சியங்கள் எவ்வகையிலும் அரசுத்தரப்பை உறுதிப்படுத்தவில்லை என்பது இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**11. இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :**

(1) மேலும் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் மேற்படி சம்பவத்தை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் செய்தார் என்பதற்கான தகுந்த சாட்சிய சான்றாவணங்களை அரசுத்தரப்பில் சமர்ப்பிக்காததால் அரசுத்தரப்பு தனது தரப்பை நீதிமன்றத்திற்கு சமர்பிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

(2) இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் தங்களது தரப்பை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான பா.நி.ச.2023 பிரிவுகள் **296(b), 118(1) மற்றும் 351(3)ன் கீழான குற்றச்சாட்டுகள் மெய்பிக்கவில்லை** என்றும் **பா.சா.அ.2023 பிரிவு 2 மற்றும் பிரிவு 104ன்** படியும் தீர்வு காண்கிறது.

**12.வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீதான ஆய்வு**

இந்த வழக்கில் அரசுத்தரப்பில் குற்றப்பத்திரிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிரான **பா.நி.ச.2023** பிரிவுகள் **296(b), 118(1) மற்றும் 351(3)ன்** கீழான குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்து எவ்வித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

**13. முடிவாக,**

(1) குற்றம் சுமத்தப்பட்ட நபரான **கணேசன் த/பெ. செல்லத்துரை** என்பவர் மீதான **பாரதிய நியாய சன்கீதா 2023 பிரிவுகள் 296(b), 118(1) மற்றும் 351(3)ன்** கீழான குற்றசாட்டுகள் அரசுத்தரப்பில் **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை **குற்றவாளி இல்லை** என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



JOTHIKAILASH SIVAMURUGAN
Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:49 +0530

*(2) வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் சமாதானமாகி பா.நா.சு.ச 2023 பிரிவு 359(8)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது சமரசம் செய்யக்கூடிய சட்டப்பிரிவுகளை பொறுத்து அனுமதிக்கப்பட்டதன் சூழ்நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்* ***பா.நி.ச. 2023 பிரிவு 126(2)ன் கீழான*** *குற்றச்சாட்டிலிருந்தும் இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.*

(3) எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபரான **கணேசன் த/பெ. செல்லத்துரை** என்பவரை வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், **பாரதிய நாகரிக் சுரக் ஷா சங்கீதா 2023 பிரிவு 271(1)ன்** படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**14. பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு**

வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் **பா.நா.சு.ச 2023** பிரிவு 498 ன் கீழ் உத்தரவு இல்லை

**15. பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396ன் கீழ் உத்தரவு**

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396** ன் கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

**16. பா.நா.சு.ச 2023 பிரிவு 481– ன் கீழ் உத்தரவு**

வழக்கில் **பா.நா.சு.ச 2023 பிரிவு 481**–ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **(30.06.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறியப்பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:28:55 +0530

நீதித்துறை நடுவர்,
இரணியல்(கூ.மு.பொ)

## **பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | கோபாலகிருஷ்ணன் | நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.2 | கார்த்தீபன் | கூடுதல் சாட்சி |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.05.2025 | புகார்மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 29.06.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 12.05.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 12.05.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 12.05.2025 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | -- | காயச்சான்றிதழ் | அ.சா.2 |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள் :** இல்லை

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணம் :** இல்லை

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.30 18:29:02 +0530

நீதித்துறை நடுவர்,
இரணியல்(கூ.மு.பொ)

Judicial Magistrate,
Eraniel

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".